# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 207/மா/2024**

**நாள்: 31.07.2025**

திரு. B. சரவணன் --- முறையீட்டு மனுதாரர்
சென்னை–17

(1) மண்டல அலுவலர், --- எதிர்மனுதாரர்கள்
மண்டலம்–10
பெருநகர சென்னை மாநகராட்சி

(2) உரிமையாளர்,
சாத்தையா உணவகம், சென்னை

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவரின் 25.10.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.10.2024 அன்று பெறப்பட்டு 207/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.B.சரவணன் என்பவர் தனது 25.10.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"பொதுமக்களுக்கான பொது பணிகளை சட்டரீதியாக செய்து வருகிறேன். நான் கடந்த மாதம் 11.9.2024, 12.9.2024 அன்று எண் 25/64 பூக்கார தெரு, வடபழனி, சென்னை–26 என்கிற முகவரியில் சாத்தையா உணவகம் நடைப்பாதையை முழுவதும் ஆக்கிரமித்து இரும்பு சீட்டுகள், ஓடுகள் கிச்சன் அடுப்புகள் மேடைகள் சிறிய மற்றும் பெரிய சல்லடைகள் மூலம் அறைகள் அமைத்து நடைபாதை சாலையை முழுவதுமாக ஆக்கிரமித்து உள்ளனர். இவர் செய்ததை போலவே மற்ற அனைவரும் மாநகராட்சிக்கு சொந்தமான பாதையை ஆக்கிரமிப்பு செய்து வருகிறார்கள். இதனை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படத்தில் காணலாம். இந்த கடை மற்றும் இதனை ஒட்டியுள்ள பக்கத்து கட்டிடம் அதற்கு பக்கத்து கட்டிடம் என அனைவரும் ரேம்ப் STEPS படிகட்டுகள் இரும்புகள் ஓடுகள் தகரத்தால் போடப்பட்ட சீட்டுகள் என அடுக்கு அடுக்காக நடைபாதையை அபகரிப்பு செய்து விட்டார்கள். இந்த நிலை தொடர்ந்தால் சில மாதங்களில் நடைபாதையை காணமுடியாத நிலை உருவாகும் இதுக்கு முழுக்க முழுக்க காரணம் அரசு அதிகாரிகள்தான். எனவே இந்த சாத்தையா ஒட்டல் உணவகத்தின் உரிமையாளர் அவர்களை மீண்டும் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என நோட்டிஸ் வழங்கி அபராதம் செலுத்தி இப்பகுதி முழுவதும் AE அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்து ஆக்கிரமிப்புகளை முழுவதும் அகற்றி மீண்டும் இது போல் நடைபெறாமல் முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்றும் கேட்டு கொள்கிறேன். இதுநாள் வரை 25.10.24

எதுவும் நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்திய AE உமா சங்கர் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 15.11.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10—ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டலம் 10—ன் மண்டல அலுவலர் தனது 02.06.2025 நாளிட்ட கடிதம் ம.அ. 10 ந.க. எண் 207/மா/2024—ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதில்—

"மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் எண் 25/64 பூக்காரத்தெரு வடபழனி, சென்னை 600 026 என்ற முகவரியில் உள்ள சாத்தையா உணவகம் கட்டிடத்தில் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சாத்தையா உணவகமானது பொது நடைபாதையை ஆக்கிரமித்து இயங்கி வருகிறது என கள ஆய்வில் கண்டறியப்பட்டது. அதனை அகற்றிட அறிவுறுத்திய பின்னரும் அதன் உரிமையாளர் அகற்றாத காரணத்தினால் அங்கு ஒரு பக்க பொது நடைபாதையில் இருந்த Cylinder மற்றும் உபகரணங்களை பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மூலம் பொது நடைபாதையை ஆக்கிரமித்து இயங்கி வந்த பகுதி 06.03.2025 அன்று அகற்றப்பட்டது. இத்துடன் புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளது. தங்களின் கவனத்திற்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேற்கூறிய கூற்றுப்படி மனுதாரரின் புகாரானது பரிசீலிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 15.07.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 08.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 15.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"நான் கடந்த மாதம் 11.9.2024, 12.9.2024 அன்று எண் 25/64 பூக்கார தெரு வடபழனி, சென்னை—26 என்கிற முகவரியில் சாத்தையா உணவகம் நடைபாதை முழுவதும் ஆக்கிரமித்து இரும்பு சீட்டுகள் ஓடுகள், கிச்சன் அடுப்புகள், மேடைகள், சிறிய மற்றும் பெரிய சல்லடைகள் மூலம் அறைகள் அமைத்து நடைபாதை சாலையை முழுவதுமாக ஆக்கிரமித்து உள்ளனர். இவர் செய்ததை போலவே மற்ற அனைவரும் மாநகராட்சிக்கு சொந்தமான பாதையை ஆக்கிரமிப்பு செய்து வருகிறார்கள். இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ல் புகார் அளிக்கப்பட்டதன் அடிப்படையில், தற்போது ரேம்ப், படிக்கட்டுகள், திண்ணை ஆகிய ஆக்கிரமிப்புகளை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலர்களால் அகற்றப்பட்டு விட்டது.

மேற்கண்ட ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டாலும், எதிர் காலத்தில் மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால், அப்பகுதியை தொடர்ந்து கண்காணித்து ஆக்கிரமிப்புகள் ஏற்படாத வண்ணம் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் மண்டல அலுவலருக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 15.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் எண் 25/64 பூக்காரத்தெரு வடபழனி, சென்னை 600 026 என்ற முகவரியில் உள்ள சாத்தையா உணவகம் கட்டிடத்தில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சாத்தையா உணவகமானது பொது நடைபாதையை ஆக்கிரமித்து இயங்கி வருகிறது என கள ஆய்வில் கண்டறியப்பட்டது. அதனை அகற்றிட அறிவுறுத்திய பின்னரும் அதன் உரிமையாளர் அகற்றாத காரணத்தினால் அங்கு ஒரு பக்க பொது நடைபாதையில் இருந்த Cylinder மற்றும் உபகரணங்கள் அமைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதி பணியாளர்கள் மூலம் 06.03.2025 அன்று அகற்றப்பட்டது, என இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட புகைப்பட நகலினை இம்முறை மன்ற நடுவர் முன் சமர்ப்பிக்கிறேன்.”

7. மற்றொரு எதிர்மனுதாரரான சாத்தையா உணவகத்தின் உரிமையாளர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் முன்பு 15.07.2025 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

8. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

“சென்னை, வடபழனி, பூக்கார தெரு, எண் 25/64 என்கிற முகவரியில் உள்ள சாத்தையா உணவகம், இரும்பு சீட்டுகள், ஓடுகள், கிச்சன் அடுப்புகள், மேடைகள், சிறிய மற்றும் பெரிய சல்லடைகள் மூலம் அறைகள் அமைத்து, நடைபாதையை முழுவதுமாக ஆக்கிரமித்து உள்ளனர் என்பதும், இவ்வாறே மற்ற அனைவரும் மாநகராட்சிக்கு சொந்தமான பாதையை ஆக்கிரமிப்பு செய்து வருகின்றனர் என்பதும், தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியால் ரேம்ப், படிக்கட்டுகள், திண்ணை ஆகிய ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது என்பதும், மேற்கண்ட ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டாலும், எதிர் காலத்தில் மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால், அப்பகுதியை தொடர்ந்து கண்காணித்து ஆக்கிரமிப்புகள் ஏற்படாத வண்ணம் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளதும் மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், சென்னை, வடபழனி, பூக்கார தெரு, எண் 25/64 என்கிற முகவரியில் உள்ள சாத்தையா உணவகத்தின் கட்டிடம் பெருநகர சென்னை மாநகராட்சி பொது நடைபாதையை ஆக்கிரமிப்பு செய்திருப்பது கண்டறியப்பட்டு, அங்கு Cylinder மற்றும் உபகரணங்கள் அமைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதியை பணியாளர்கள் மூலம் அகற்றப்பட்டது என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரரால் மனுவில் குறிப்பிடப்பட்ட, சென்னை, வடபழனி, பூக்கார தெரு, எண் 25/64 என்கிற முகவரியில் இயங்கி வரும் சாத்தையா உணவகத்தின் கட்டிடம் பெருநகர சென்னை மாநகராட்சியால் கள ஆய்வு செய்யப்பட்டு, பொது நடைபாதையில் Cylinder மற்றும் உபகரணங்கள் அமைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதியினை பணியாளர்கள் மூலம்

அகற்றப்பட்டது என்று மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்து இருந்தாலும், மீண்டும் ஆக்கிரமிப்பு ஏற்படா வண்ணம், அப்பகுதியினை தொடர்ந்து கண்காணித்து, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலருக்கு உரிய அறிவுரை வழங்குமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஜூலை திங்கள்31–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. B. சரவணன்,
கதவு எண் 1 , புது தெரு,
கண்ணம்மாபேட்டை,
தியாகராய நகர்,
சென்னை–600 017.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
கோடம்பாக்கம்,
சென்னை–600 024.

(4) உரிமையாளர்,
சாத்தையா உணவகம்,
எண் 25/64, பூக்காரத் தெரு,
வடபழனி,
சென்னை–600 026.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer),
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.தோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

31/7/25
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032